# நிலக்கடலையின் விலை நிலையாக இருக்கும்

வேளாண் அமைச்சகத்தின் படி, 2015-16 ஆம் ஆண்டில் நிலக்கடலை 44.6 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 71.81 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 2.83 சதவீதம் பரப்பளவிலும் 2.98 சதவீதம் உற்பத்தியிலும் குறைந்துள்ளது. குஜராத், ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை நிலக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் நிலக்கடலை முந்தைய ஆண்டை விட சற்று குறைவான பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படுகிறது.

நாட்டின் நிலக்கடலையின் மொத்த உற்பத்தியில் 96 சதவீதம் உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்திய எண்ணெய் வித்து ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தின்படி சென்ற வருடத்தை விட இவ்வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் நிலக்கடலையின் ஏற்றுமதி 22 சதவீதம் குறைந்துள்ளது. சமீபத்தில் இந்திய நிலக்கடலையின் இறக்குமதிக்கு வியட்நாமில் போடப்பட்ட தடை ஒன்பது மாதங்களுக்கு பிறகு நீக்கப்பட்டது.

குறைந்த ஈரப்பதம் அதிக எண்ணெய் சதவீதம், சிவப்பு நிறம் மற்றும் பெருத்த விதைகள் அதிகம் விரும்பப்படுகிறது. குஜராத்தில் பருத்தி லாபகரமாக இல்லாததால் விவசாயிகள் நிலக்கடலைக்கு மாறியதால் நடப்பாண்டில் நிலக்கடலையின் பரப்பளவு 15 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம் மற்றும் காநாடகாவில் வறட்சி காரணமாக நிலகடலையின் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய நிலக்கடலையின் விலையை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான நிலக்கடலையின் பண்ணை விலை மே - ஜீன், 2016 ல் கிலோவிற்கு ரூ.45-47 சேவூர்

சந்தையிலும் (மிட்டாய் தயாரிப்பிற்காக) மற்றும் திண்டிவனம் சந்தையில் கிலோவிற்கு ரூ.58-60 (எண்ணெய் பிழிதலுக்கு) இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின்படி நிலக்கடலை விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்<br>
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்<br>
கோயமுத்தூர்-641 003<br>
தொலைபேசி - 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்<br>
எண்ணெய் வித்துக்கள் துறை<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்<br>
கோயமுத்தூர்-641 003<br>
தொலைபேசி - 0422- 2450812